மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. *(குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

(அ) இடை நிலை ஆசிரியர் நியமனத்தில் பதிவு மூப்பு முறை மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன? சொல்லுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: One by one. *(குறுக்கீடுகள்)* Right, எடுக்கிறேன், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். திரு. மணி, சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் வேலை நியமனத்தில் இதுவரையில் இருந்துவந்த மாவட்ட அளவிலான பதிவு மூப்பு அடிப்படை மாற்றப்பட்டு, இப்பொழுது மாநில அளவிலான பதிவு மூப்பு என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனாலே ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் மத்தியிலே மிகப் பெரிய பதற்ற நிலை; உண்ணாவிரதப் போராட்டம் இருந்தார்கள். அது நள்ளிரவு வரை நீடித்தது. மிகப் பெரிய பதற்றம்; 27 மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற நிலை மேலோங்கி இருக்கின்ற காரணத்தினாலே, அது நீதிமன்ற ஆணை என்று சொன்னாலும்கூட, அந்த நீதிமன்றப் பிரச்சினையை நீக்கி, கொள்கை முடிவாக எடுத்து, பழைய மாதிரியே இருக்கச் செய்ய வேண்டும். இப்பொழுது பார்த்தால் பணி உயர்விலே மாவட்ட அளவிலான பதவி மூப்பு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது ஆய்விலே இருக்கிறது. *(குறுக்கீடு)* எடுக்கப்படும். *(குறுக்கீடு)* உட்காருங்கள். *(குறுக்கீடு)* செல்வி கே. பாலபாரதி.